# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 92/மா/2025**

**நாள்: 14.07.2025**

| | | |
|---|---|---|
| V. கோபால்,<br>குரோம்பேட்டை, சென்னை–44 | --- | முறையீட்டு மனுதாரர் |
| (1) ஆணையர்,<br>தாம்பரம் மாநகராட்சி<br>(2) உரிமையாளர், ஏ.வி.எம். அக்வா,<br>M/s R.S. Food & Beverages,<br>சென்னை–44 | --- | எதிர்மனுதாரர்கள் |

சென்னை–44, குரோம்பேட்டை, அருள்முருகன் ராமமூர்த்தி நகர், 2வது குறுக்குத் தெரு, கதவு எண் 3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V. கோபால் என்பவரின் 20.02.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.02.2025 அன்று பெறப்பட்டு 92/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–44, குரோம்பேட்டை, அருள்முருகன் ராமமூர்த்தி நகர், 2வது குறுக்குத் தெரு, கதவு எண் 3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V. கோபால் என்பவரின் 20.02.2025 நாளிடப்பட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

(1) “நிலத்தடி நீரை உறிஞ்சி விற்கும் இந்த நிறுவனத்தால் எங்கள் வீடுகளின் தண்ணீர் ஆதாரம் குறைகிறது.

(2) Water Plantக்கு காலை 5.30 முதல் இரவு 11 மணி வரை லாரிகள், மினி லாரி டேங்கர் லாரிகள், ஆட்டோ, இரு சக்கர வாகனங்கள் வியாபார நோக்கத்துடன் அதிவேகமாக வந்து செல்வதால், நகரில் வாழும் குழந்தைகள், வயதானவர்கள், பள்ளி செல்லும் சிறுவர்கள் ஆகிய அனைவரும் பயத்துடனேயே வெளியே செல்கின்றனர்.

(3) அதிகமான பாரத்துடன் தண்ணீர் ஏற்றி வரும் லாரிகளால் பாதாள சாக்கடை Manhole உடைந்து கழிவுநீர் வெளியேறி ஆறு போல் ரோட்டில் தேங்குகிறது.

(4) அதிகமான மின்சார சாதனங்களை Water Plant–ல் பயன்படுத்துவதால் எங்கள் வீடுகளுக்கு Low Voltage தான் கிடைக்கிறது.

(5) Water Plant–ல் நிலத்தடி நீரை உறிஞ்சி சுத்திகரித்து கழிவு நீரை ரோட்டிலேயே விடுகின்றனர்.

(6) எங்கள் வீட்டின் வெளியே இரு சக்கர வாகனங்கள் செல்ல முடியாமல் Water Plant–க்கு வரும் லாரிகள் வழியிலேயே நிறுத்திச் செல்கின்றனர். மேலும் எங்கள் வீட்டு இரு சக்கர வாகனத்தைச் சேதப்படுத்துகின்றனர்.

(7) எங்கள் பகுதி நெமிலிச்சேரி கிராமமாக இருந்தபோது, சாலை எவ்வளவு அகலம் இருந்ததோ (16 அடி) அதே அளவு தான் பல்லாவரம் நகராட்சியாக இருந்தபோதும் தாம்பாரம் மாநகராட்சியாக தற்போது தரம் உயர்ந்த பின்பும் உள்ளது. இதில் தற்போது National Highwayயில் செல்லும் வாகனங்கள் போல இங்கு வாகனங்கள் அதிவேகமாக வந்து செல்கின்றது (தண்ணீர் லாரிகள்) மேலும் அதிக வாகன புகையால் காற்று மாசு ஏற்படுகிறது.

(8) Water Plant–க்கு வரும் மினிலாரி Driverகள் ஆலையின் உள்ளேயும் வெளியேயும் அமர்ந்து கொண்டு மது அருந்துவதுடன் அசிங்கமான வார்த்தைகளால் அவர்களுக்குள் பேசி கலாட்டா செய்வதால் எதிரே உள்ள வீடுகளில் உள்ள பெண்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றது.

(9) கடந்த 5 வருடங்களுக்கு மேலாக பல்லாவரம் நகராட்சி ஆணையருக்கும், தற்போது தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு மனு எழுதியும் எவ்வித பயனும் இல்லை.

(10) மாவட்ட ஆட்சியர் (செங்கல்பட்டு) அவர்களுக்கு மனு அளித்ததில் Water Plant–க்கு ஆய்வு செய்ய வந்த VAO பெண் அதிகாரி அந்த நிறுவனத்திலேயே தண்ணீர் கேன் கொடுக்குமாறு கேட்டு வாங்கிச் செல்கிறார்.

(11) உரிய நடவடிக்கை எடுக்க செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர், பல்லாவரம் வட்டாட்சியருக்கு உத்தரவிட்ட பின்னரும், எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் பல்லாவரம் வட்டாட்சியரின் வாகனத்தில் 1 லிட்டர் பாட்டில் உள்ள பண்டில்களை எடுத்துச் செல்கின்றனர்.

(12) பாதுகாப்பில்லாத சூழ்நிலையில் காவல் நிலையத்தில் புகார் அளித்தால் அவர்களும் Water Bottle 20L, 1 Lit பாட்டில்களை எடுத்துச் செல்கின்றனர் எங்கள் புகாருக்கு எந்த நடவடிக்கையும் இல்லை.

ஆகவே, மேற்சொன்ன புகாரை விசாரித்தும், ஆய்வு செய்தும் Water Plant இயங்குவதை தடை செய்து எங்கள் நீர் ஆதாரத்தை காக்கவும் எங்கள் மக்கள் அச்சமின்றி வெளியே செல்லவும் உதவுவீர்கள் என நம்புகிறோம்." என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 07.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 3, உதவி ஆணையாளர் தனது கடிதம் ந.க. எண் 1415/2025/எப்1, நாள் 09.05.2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

"சென்னை–44, குரோம்பேட்டை, நெமிலிச்சேரி, செந்தில் நகர், வரதப்பிள்ளை தெரு, இலக்கம் 109/1 என்ற முகவரியில் அமைந்துள்ள AVM Aqua (Packaged Drinking

Water) R.S. Food & Beverages எனும் நிறுவனத்தினை 05.05.2025ம் தேதியில் நேராய்வு செய்யப்பட்டது. மேற்படி நிறுவனக் கட்டிடம் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 (முந்தைய பல்லவபுரம் நகராட்சி)–ல் கட்டட அனுமதி எண் 170/18/எப்2 நாள் 18.05.2018–ன்படி கட்டட அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் தொழிற்சாலை கட்டடத்திற்கு வரிவிதிப்பு எண் 009/023/903916–ன்படி தொழிற்சாலை பிரிவின் கீழ் சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், fssai (Food Safety and Standards Authority of India) சான்று, BIS (Bureau of Indian Standards) சான்று, போர்வெல்லிருந்து தண்ணீர் எடுப்பதற்கு வருவாய் கோட்டாட்சியர், தாம்பரம் அவர்களின் அனுமதி சான்று, 10/18 நெல்லிபேட்டை தெரு, ஜமீன் ராயப்பேட்டை, குரோம்பேட்டை என்ற முகவரியில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து நீர் எடுப்பதற்கான வாடகை ஒப்பந்தம் மற்றும் மாநகராட்சி தொழில் உரிமச் சான்று பெறப்பட்டுள்ளது.

மேலும் இந்நிறுவனம் போர்வெல் குழாயிலிருந்து தண்ணீர் ஏதும் எடுக்கவில்லை. அதற்கு மாறாக அருகில் சுமார் 1000 அடி தொலைவில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து சுத்திகரிப்பு செய்து பயன்படுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட உரிமம் மற்றும் சான்றுகளின் நகல்களை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

4. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவத்தில் 25.06.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 19.06.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 25.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

(1) ''நிலத்தடி நீரை உறிஞ்சி விற்கும் இந்த நிறுவனத்தால் எங்கள் வீடுகளின் தண்ணீர் ஆதாரம் குறைகிறது.

(2) Water Plantக்கு காலை 5.30 முதல் இரவு 11 மணி வரை லாரிகள், மினி லாரி டேங்கர் லாரிகள், ஆட்டோ, இரு சக்கர வாகனங்கள் வியாபார நோக்கத்துடன் அதிவேகமாக வந்து செல்வதால், நகரில் வாழும் குழந்தைகள், வயதானவர்கள், பள்ளி செல்லும் சிறுவர்கள் ஆகிய அனைவரும் பயத்துடனேயே வெளியே செல்கின்றனர்.

(3) அதிகமான பாரத்துடன் தண்ணீர் ஏற்றி வரும் லாரிகளால் பாதாள சாக்கடை Manhole உடைந்து கழிவுநீர் வெளியேறி ஆறு போல் ரோட்டில் தேங்குகிறது.

(4) Water Plant–ல் நிலத்தடி நீரை உறிஞ்சி சுத்திகரித்து கழிவு நீரை ரோட்டிலேயே விடுகின்றனர்.

(5) எங்கள் வீட்டின் வெளியே இரு சக்கர வாகனங்கள் செல்ல முடியாமல் Water Plant–க்கு வரும் லாரிகள் வழியிலேயே நிறுத்திச் செல்கின்றனர். மேலும் எங்கள் வீட்டு இரு சக்கர வாகனத்தைச் சேதப்படுத்துகின்றனர்.

(6) நாள் முழுவதும் அதிக வாகனங்கள் வந்து செல்வதால் அதிக தூசி ஏற்படுகிறது. இதனால் ஆஸ்மா நோயாளியான என் மனைவி மிகவும் அவதிப்படுகிறார்.

மேற்கண்ட புகார் குறித்து எனது வீடியோவினை முறைமன்ற நடுவத்தின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புகிறேன். மேலும், இத்துடன் சேதமடைந்த ரோட்டின் புகைப்பட நகலினை இணைத்துள்ளேன்.

ஆகவே, மேற்சொன்ன புகாரை விசாரித்தும், ஆய்வு செய்தும் Water Plant இயங்குவதை தடை செய்து எங்கள் நீர் ஆதாரத்தை காக்கவும் எங்கள் மக்கள் அச்சமின்றி வெளியே செல்ல மாண்புமிகு இம்முறைமன்ற நடுவர் அவர்களை மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

**6.** தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3–ன் துப்புரவு ஆய்வாளர் **25.06.2025** அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"சென்னை–44, குரோம்பேட்டை, நெமிலிச்சேரி, செந்தில் நகர், வரதப்பிள்ளை தெரு, இலக்கம் 109/1 என்ற முகவரியில் அமைந்துள்ள AVM Aqua (Packaged Drinking Water) R.S. Food & Beverages எனும் நிறுவனத்தினை 05.05.2025ம் தேதியில் நேராய்வு செய்யப்பட்டது. மேற்படி நிறுவனக் கட்டிடம் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 (முந்தைய பல்லவபுரம் நகராட்சி)–ல் கட்டட அனுமதி எண் 170/18/எப்2 நாள் 18.05.2018–ன்படி கட்டட அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் தொழிற்சாலை கட்டடத்திற்கு வரிவிதிப்பு எண் 009/023/903916–ன்படி தொழிற்சாலை பிரிவின் கீழ் சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், fssai (Food Safety and Standards Authority of India) சான்று, BIS (Bureau of Indian Standards) சான்று, போர்வெல்லிருந்து தண்ணீர் எடுப்பதற்கு வருவாய் கோட்டாட்சியர், தாம்பரம் அவர்களின் அனுமதி சான்று, 10/18 நெல்லிபேட்டை தெரு, ஜமீன் ராயப்பேட்டை, குரோம்பேட்டை என்ற முகவரியில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து நீர் எடுப்பதற்கான வாடகை ஒப்பந்தம் மற்றும் மாநகராட்சி தொழில் உரிமச் சான்று பெறப்பட்டுள்ளது.

மேலும் இந்நிறுவனம் போர்வெல் குழாயிலிருந்து தண்ணீர் ஏதும் எடுக்கவில்லை. அதற்கு மாறாக அருகில் சுமார் 1000 அடி தொலைவில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து சுத்திகரிப்பு செய்து பயன்படுத்தி வருவதாக மேற்கண்ட நிறுவனத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ரோடு சேதம் அடைவதைக் குறித்து தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கலந்து ஆலோசித்து தரமான சாலை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.''

7. மற்றொரு எதிர்மனுதாரரான M/s.R.S.Food & Beverages நிறுவனத்தின் உரிமையாளர் திருமதி சங்கீதா ரமேஷ் என்பவர் **25.06.2025** அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"செங்கல்பட்டு மாவட்டம், குரோம்பேட்டை, நெமிலிச்சேரி, செந்தில் நகர், வரதப்பிள்ளை தெரு, கதவு எண்.109/1, என்ற முகவரியில் M/s.R.S.Food & Beverages என்ற நிறுவனம் என் கணவர் திரு.ரமேஷ் என்பவரால் துவக்கப்பட்டு, அவர் காலமான பின் என்னால் நடத்தப்பட்டு வருகிறது. இந்நிறுவன கட்டிடத்திற்கு 18.05.2018 அன்று கட்டிட அனுமதி பெறப்பட்டது. மேலும், fssai (Food Safety and Standards Authority of India) சான்று மற்றும் BIS (Bureau of Indian Standards) சான்றும், போர்வெல்லிருந்து தண்ணீர் எடுப்பதற்கு வருவாய் கோட்டாட்சியர், தாம்பரம் அவர்களின் அனுமதி சான்று 10/18 நெல்லிப்பேட்டை தெரு, ஜமீன் இராயப்பேட்டை, குரோம்பேட்டை என்ற முகவரியில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து நீர் எடுப்பதற்கான வாடகை ஒப்பந்தம் மற்றும் மாநகராட்சி தொழில் உரிமச் சான்று பெறப்பட்டுள்ளது.

எங்கள் நிறுவனத்தின் மீது மனுதாரர் குறிப்பிட்ட புகார் குறித்து லாரி ஓட்டுநர்களுக்கு அந்த பகுதியில் வசிக்கும் குடியிருப்போர்களுக்கும், குறிப்பாக பள்ளி மாணவ, மாணவியர்கள், முதியோர்கள் ஆகியோர்களை கவனத்தில் கொண்டு, கவனமுடன் வாகனம் இயக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இது தொடர்பாக மாதந்தோறும் லாரி ஓட்டுநர்களுக்கு பொதுமக்களின் பாதுகாப்பு குறித்து அறிவுரை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு உறுதியளிக்கிறேன்''.

8. மனுதாரரின் முறையீட்டு மனு, வாக்குமூலம், புகைப்படம் மற்றும் வீடியோ ஆதாரங்கள், தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3 உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் துப்புரவு ஆய்வாளரின் வாக்குமூலம் மற்றும் M/s.R.S.Food & Beverages என்ற நிறுவனத்தின் உரிமையாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

நிலத்தடி நீரை உறிஞ்சி விற்கும் AVM Aqua (Packaged Drinking Water) R.S. Food & Beverages என்ற நிறுவனத்தால் தங்கள் வீடுகளின் தண்ணீர் ஆதாரம் குறைகிறது எனவும், Water Plantக்கு காலை 5.30 முதல் இரவு 11 மணி வரை லாரிகள், மினி லாரி டேங்கர் லாரிகள், ஆட்டோ, இரு சக்கர வாகனங்கள் வியாபார நோக்கத்துடன் அதிவேகமாக வந்து செல்வதால், நகரில் வாழும் குழந்தைகள், வயதானவர்கள், பள்ளி செல்லும் சிறுவர்கள் ஆகிய அனைவரும் பயந்து கொண்டு செல்வதாகவும், அதிகமான பாரத்துடன் தண்ணீர் ஏற்றி வரும் லாரிகளால் பாதாள சாக்கடை Manhole உடைந்து கழிவுநீர் வெளியேறி ஆறு போல் ரோட்டில் தேங்குகிறது எனவும், Water Plant–ல் நிலத்தடி நீரை உறிஞ்சி சுத்திகரித்து விட்டு, கழிவு நீரை ரோட்டிலேயே விடுவதாகவும், தங்கள் வீட்டின் வெளியே இரு சக்கர வாகனங்கள் செல்ல முடியாமல் Water Plant–க்கு வரும் லாரிகள் வழியிலேயே நிறுத்திச் செல்வதாகவும், மேலும் தங்கள் வீட்டு இரு சக்கர வாகனத்தைச் சேதப்படுத்துவதாகவும், நாள் முழுவதும் அதிக வாகனங்கள் வந்து செல்வதால் அதிக தூசி ஏற்படுவதாகவும், இதனால் ஆஸ்மா நோயாளியான தனது மனைவி மிகவும் அவதிப்படுவதாகவும் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலங்களிலிருந்து அறிய முடிகிறது.

AVM Aqua (Packaged Drinking Water) R.S. Food & Beverages எனும் நிறுவனத்தினை நேராய்வு செய்யப்பட்டதில், மேற்படி நிறுவனக் கட்டிடம் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 (முந்தைய பல்லவபுரம் நகராட்சி)–ல் கட்டட அனுமதி பெறப்பட்டுள்ளது என்பதும், தொழிற்சாலை கட்டடத்திற்கு தொழிற்சாலை பிரிவின் கீழ் சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதும், மேலும், fssai (Food Safety and Standards Authority of India) சான்று, BIS (Bureau of Indian Standards) சான்று, போர்வெல்லிருந்து தண்ணீர் எடுப்பதற்கு தாம்பரம் வருவாய் கோட்டாட்சியரின் அனுமதி சான்று, 10/18 நெல்லிபேட்டை தெரு, ஜமீன் ராயப்பேட்டை, குரோம்பேட்டை என்ற முகவரியில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து நீர் எடுப்பதற்கான வாடகை ஒப்பந்தம் மற்றும் மாநகராட்சி தொழில் உரிமச் சான்று பெறப்பட்டுள்ளது என்பதும், இந்நிறுவனம் போர்வெல் குழாயிலிருந்து தண்ணீர் ஏதும் எடுக்கவில்லை என்பதும், அதற்கு மாறாக அருகில் சுமார் 1000 அடி தொலைவில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து சுத்திகரிப்பு செய்து பயன்படுத்தி வருவதாக மேற்கண்ட நிறுவனத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதும், ரோடு சேதம் அடைவதைக் குறித்து தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கலந்து ஆலோசித்து தரமான சாலை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் துப்புரவு ஆய்வாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

செங்கல்பட்டு மாவட்டம், குரோம்பேட்டை, நெமிலிச்சேரி, செந்தில் நகர், வரதப்பிள்ளை தெரு, கதவு எண்.109/1, என்ற முகவரியில் இயங்கி வரும் M/s.R.S.Food & Beverages என்ற நிறுவனத்தின் உரிமையாளர் திருமதி சங்கீதா ரமேஷ் என்பவரின் கணவர் திரு.ரமேஷ் என்பவரால் துவக்கப்பட்டு, அவர் காலமான பின் தன்னால் நடத்தப்பட்டு வருவதாகவும், இந்நிறுவன கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி பெறப்பட்டது எனவும், மேலும், fssai (Food Safety and Standards Authority of india) சான்று, BIS (Bureau of Indian Standards) சான்று, போர்வெல்லிருந்து தண்ணீர் எடுப்பதற்கு தாம்பரம் வருவாய் கோட்டாட்சியரின் அனுமதி சான்று, 10/18 நெல்லிப்பேட்டை தெரு, ஜமீன் இராயப்பேட்டை, குரோம்பேட்டை என்ற முகவரியில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து நீர் எடுப்பதற்கான வாடகை ஒப்பந்தம் மற்றும் மாநகராட்சி தொழில் உரிமச்சான்று ஆகியவை பெறப்பட்டுள்ளதாகவும், தங்கள் நிறுவனத்தின் மீது மனுதாரர் குறிப்பிட்ட புகார் குறித்து லாரி ஓட்டுநர்களுக்கு அந்த பகுதியில் வசிக்கும் குடியிருப்போர்களுக்கும், குறிப்பாக பள்ளி மாணவ, மாணவியர்கள், முதியோர்கள் ஆகியோர்களை கவனத்தில் கொண்டு, கவனமுடன் வாகனம் இயக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும், இது தொடர்பாக மாதந்தோறும் லாரி ஓட்டுநர்களுக்கு பொதுமக்களின் பாதுகாப்பு குறித்து அறிவுரை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது மற்றொரு எதிர்மனுதாரரான M/s.R.S.Food & Beverages-ன் உரிமையாளரின் வாக்குமூலத்தில் அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர், செங்கல்பட்டு மாவட்டம், குரோம்பேட்டை, நெமிலிச்சேரி, செந்தில் நகர், வரதப்பிள்ளை தெரு, கதவு எண்.109/1, என்ற முகவரியில் உள்ள AVM Aqua (Packaged Drinking Water) R.S. Food & Beverages என்ற வணிக நிறுவனம் குறித்து அளித்த புகார் தொடர்பாக 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம், பிரிவு 12(d)–ன்படி கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது:

(i) அரசு ஏற்கனவே அறிவுறுத்தியுள்ளவாறு, மழைநீர் சேகரிப்பு மையங்கள், வீடுகளில் பொது இடங்கள் மற்றும் ஏவிஎம் அக்வா நிறுவனத்திலும் அமைக்கப் பெற்றுள்ளனவா என்பதை உறுதி செய்திட வேண்டும்.

(ii) அப்பகுதியில் உள்ள சாலையில் வேகத் தடைகள் அமைத்து மனுதாரர் குறிப்பிடும் வாகனங்களின் வேகத்தை குறைப்பதின் மூலம் அப்பகுதியில் உள்ள சாலையில் செல்பவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.

(iii) மேற்கண்ட பகுதியில் உள்ள சாலைகளிலுள்ள சாக்கடையின் உடைந்த மேல்மூடிகளை புதியதாக பொருத்துதல்.

(iv) மேற்கண்ட பகுதியில் உள்ள சேதமடைந்த சாலைகளை தரமான சாலையாக அமைத்தல்.

(v) மேற்கண்ட பகுதியில் உள்ள தண்ணீர் லாரிகளால் ஏற்படும் ஒலி மற்றும் மாசு தொடர்பாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை எடுத்தல்.

(vi) மேற்கண்ட நிறுவனத்திற்கு வந்து செல்லும் வாகன ஓட்டுநர்களுக்கு காவல் துறையுடன் கலந்தாலோசித்து பொதுமக்களின் பாதுகாப்பு குறித்தான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

2025–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 14–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. V. கோபால்,
கதவு எண் 3, 2வது குறுக்குத் தெரு,
அருள்முருகன் ராமமூர்த்தி நகர்,
குரோம்பேட்டை, சென்னை–600 044.

(2) திருமதி சங்கீதா ரமேஷ்,
உரிமையாளர்,
M/s.R.S.Food & Beverages,
கதவு எண் 109/1,
வரதப்பிள்ளை தெரு,
செந்தில் நகர், நெமிலிச்சேரி,
குரோம்பேட்டை, சென்னை–600 044.

(3) ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி, தாம்பரம்.

(4) உதவி ஆணையர்,
மண்டலம் 3,
தாம்பரம் மாநகராட்சி,
தாம்பரம்–600 073.

(5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

(6) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032